## தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம்

## தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கைநெறிக்கான அனுமதி, 2017⁄2018

மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் மூன்று வருடகால முழுநேர தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்குத் தெரிவு செய்வதற்காக தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இக் கற்கை நெறியானது, **தியகம, ஹோமாகமவில் அமைந்துள்ள தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழக புதிய வளாகத்தில்** நடாத்தப்படும்.

### 1. பொதுவானவை:

தொழில்நுட்பவியல் தேசிய டிப்ளோமா கற்கை நெறியானது இரண்டு வருட முழுநேர கற்றலையும், ஒரு வருட தொழிற் பயிற்சியையும் உள்ளடக்கியது. இதன் கற்கைமொழி ஆங்கிலம் ஆகும். கற்கை நெறிகள் பின்வரும் கற்கைத் துறைகளில் வழங்கப்படுகின்றது.

அ) கடல்சார் கற்கைநெறி (வகை 1)

- (i) கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம்.
- (ii) கப்பற்றுறை கல்வியும் தொழில்நுட்பமும்.

ஆ) ஏனைய கற்கைநெறிகள் (வகை 11)

- (i) இரசாயன பொறியியல் தொழில்நுட்பம்.
- (ii) குடிசார் பொறியியல் தொழில்நுட்பம்.
- (iii) மின்சார பொறியியல் தொழில்நுட்பம்.
- (iv) இலத்திரனியல் மற்றும் தொலைத் தொடர்பு பொறியியல் தொழில்நுட்பம்.
- (v) இயந்திரவியல் பொறியியல் தொழில்நுட்பம்.
- (vi) பல்பகுதிய தொழில்நுட்பம்.
- (vii) புடவை மற்றும் ஆடைத் தொழில்நுட்பம்.

### 2. தகைமைகள்:

#### 2.1 வயது மற்றும் பிற தகைமைகள்:

(a) விண்ணப்பதாரிகள் 31.12.2016 திகதியன்று 24 வயதிற்குக் குறைந்தவர்களாக இருத்தல் வேண்டும்.

(b) 31.12.2016 இல் 20 வயதிற்குக் குறைந்த விண்ணப்பதாரர்களுக்குக் கப்பற்றுறைக் கல்வியும் தொழில்நுட்பமும், கடல்சார் பொறியியல் தொழில்நுட்பம் ஆகிய பாட நெறிகளுக்கான அனுமதிக்கு முன்னுரிமை வழங்கப்படும். கடல்சார் கற்கைநெறி (வகை 1) இற்கான விண்ணப்பதாரிகள் மருத்துவ பரிசோதனை மற்றும் நேர்முகப் பரீட்சை என்பவற்றுக்கு விசேடமாக தோற்றுதல் வேண்டும்.

(c) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக் கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கைநெறிக்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.

#### 2.2 கல்வித்தகைமை

விண்ணப்பதாரிகள் இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சையில் கீழ் குறிப்பிட்டுள்ள பாடங்களில் மூன்றிக்குக் (03) குறையாமல் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

(i) இணைந்த கணிதம்
(ii) உயர் கணிதம்
(iii) பௌதிகவியல்
(iv) இரசாயனவியல்

இலங்கை பரீட்சைகள் ஆணையாளரினால் 2014 அல்லது 2015 அல்லது 2016 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்ட க.பொ.த.(உ.த.) பரீட்சைகளில் ஒன்றில் ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

## 3. தெரிவு முறைமை:

### 3.1 கற்கைநெறிக்கான அனுமதி

அனுமதிக்கான தெரிவானது க.பொ.த.(உ.த.) பரீட்சைபெறுபேற்றின் அடிப்படையிலும், மொறட்டுவப் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்பவியல் நிறுவனத்தினரால் நடாத்தவிருக்கும் தகுதிகாண் பரீட்சை முடிவுகளிலும் தங்கியிருக்கும்.

தகுதிகாண் பரீட்சையில் சித்தி எய்தியவர்களில், க.பொ.த.(உ.த) பரீட்சையில் அதிகூடிய பெறுபேற்றையுடையவர்கள், திறமை வரிசையில் தெரிவு செய்யப்படுவர் அதாவது இசற்-மதிப்பீட்டு முறை (Z-Score) அடிப்படையாகக் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படுபவர்களில், 40% தினர் திறமை அடிப்படையிலும், 60% தினர் மாவட்ட ஒதுக்கீடு முறை அடிப்படையிலும் தெரிவு செய்யப்படுவர்.

### 3.2 கற்கைத் துறை

கற்கைத் துறைகளுக்கு மாணவர்களைத் தெரிவு செய்கையில் தகுதிகாண் பரீட்சைப் பெறுபேறு, விண்ணப்பதாரியின் கற்கைத்துறை தெரிவு வரிசை என்பன இணைந்து கருத்திற் கொள்ளப்படும்.

## 4. விண்ணப்பிக்கும் முறை:

### 4.1 விண்ணப்பப்படிவம்

(i) மாதிரி விண்ணப்பப்படிவம் மற்றும் தகவல்களை அரச வர்த்தமானியில் **அல்லது** பின்வரும் இணையத்தள முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

**http://www.mrt.ac.lk/itum**

**(ii)** விண்ணப்பப் படிவமானது, கடித உறையின் இடது மேல் மூலையில் **"NDT Admission 2017/2018"** என ஆங்கிலத்தில் குறிக்கப்பட்டு, **பிரதிப்பதிவாளர்| தொழில்நுட்பவியல் நிறுவனம்| மொறட்டுவைப் பல்கலைக் கழகம்| கட்டுப்பெத்த| மொறட்டுவ** என்ற முகவரிக்கு **பதிவுத்தபாலில்** அனுப்பப்படுதல் வேண்டும்.

(iii) விண்ணப்பப் படிவமானது விண்ணப்ப முடிவு திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ பிரதிப்பதிவாளர் தொழில்நுட்பவியல் நிறுவனம் மொறட்டுவைப் பல்கலைக் கழகம் என்ற முகவரிக்கு வந்தடைதல் வேண்டும்.

(iv) ஒரு 9" x 4" முத்திரை ஒட்டிய கடித உறையில் (பெறுமதி 40/=) உங்களது சுயவிலாசத்தை எழுதி விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பப்படுதல் வேண்டும்.

(v) விண்ணப்பங்கள் பூர்த்தியாக்கப்பட்டு, விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டவாறு உள்ளடக்கப்பட்டவை உறுதிப்படுத்தப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். மூல அல்லது பிரதி ஆவணங்கள் தேவையில்லை (விண்ணப்ப படிவத்தில் 3 மற்றும் 5 இனைப்பார்க்க.)

### 4.2 கற்கைநெறிக்கான முன்னுரிமை

(i) இரண்டு வகை கற்கைநெறிகள் உள்ளன.

(ii) விண்ணப்பதாரிகள் கடல்சார் கற்கைநெறி (வகை 1) அல்லது ஏனைய கற்கைநெறி (வகை 11) அல்லது இரண்டிற்கும் விண்ணப்பிக்கலாம். இரண்டிற்கும் விண்ணப்பிக்குமிடத்து உங்கள் விருப்பு வரிசையை தெரியப்படுத்தல் வேண்டும்.

(iii) வகை (1) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 எனவும் குறிப்பிடுக. கடல்சார் கற்கைநெறிக்கு விண்ணப்பிக்கும் மாணவர்கள் மாத்திரம் இதனை நிரப்புதல் வேண்டும்

(iv) வகை (2) இல் முதலாவது விருப்பு 1 எனவும் இரண்டாவது விருப்பு 2 என்றவாறு உங்கள் விருப்புகளை (1,2,3,4,5,6,7) என குறிப்பிடுக.

5. (i) **விண்ணப்பக் கட்டணம்**:

ஏதாவதொரு வகை கற்கைநெறிக்கு ரூ. 400/= (நாநூறு ரூபாய்) உம் இரண்டு வகைகளுக்கும் சேர்த்து விண்ணப்பிக்க விரும்பினால் ரூ. 600/= (அறுநூறு ரூபாய்) உம் ஆகும். இதனை ஏதாவதொரு இலங்கை வங்கிக்கிளையில் மட்டும் **தொழில்நுட்பவியல் நிறுவனம், மொறட்டுவைப் பல்கலைக்கழகம், இலங்கை வங்கி, கட்டுப்பெத்தை கிளையில்** உள்ள கணக்கு இல.**0000308280** க்கு செலுத்தி பெறப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணபப்பபடிவத்துடன் இணைத்து அனுப்பி வைக்கவும். விண்ணப்பக் கட்டணம் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

(ii) **விண்ணப்ப முடிவு திகதி**:

விண்ணப்ப முடிவு திகதியானது 05ம் திகதி ஆனி மாதம் 2017 ஆம் வருடம் **(05.06.2017) .**

6. **தகுதி காண்பரீட்சை**:

ஒவ்வொரு மாவட்டத்திலும், அம்மாவட்டத்திற்குரிய க.பொ.த (உ.த) பரீட்சைப் பெறுபேற்றுக்கமைய நிரல்படுத்தப்பட்டு அதிகூடிய பெறுபேற்றையுடைய விண்ணப்பதாரிகளே தகுதிகாண் பரீட்சைக்கு அழைக்கப்படுவர். இப்பரீட்சை தொழில்நுட்பவியல் நிறுவனம் மொறட்டுவைப் பல்கலைக்கழகத்தினரால் நடத்தப்படும்.

7. **பதிவு செய்தல்**:

(i) தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் கற்கைநெறிக்குப் பதிவு செய்வதற்காக பின்வரும் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

- க.பொ.த. (உ.த.) சான்றிதழ்
- க.பொ.த. (உ.த.)இசற்- மதிப்பீடு (Z-Score)
- பாடசாலை விலகற் சான்றிதழ்
- பிறப்புச் சான்றிதழ்

பத்திரம்/சான்றிதழ்களில் பெயர் மாற்றம் ஏதும் இருப்பின், சத்தியக்கூற்று இணைக்கப்பட வேண்டும்.

8. **முக்கிய கவனத்திற்கு:**

**(i)** **ஒரு பரீட்சார்த்தி தேசிய தொழில்நுட்பவியல் டிப்ளோமா கற்கை நெறிக்கு பதிவு செய்யப்பட்டதும் அக் கற்கை நெறிக் காலத்தின் போது இந்த பல்கலைக்கழகத்திலோ இலங்கையின் வேறு எந்தப் பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) உயர்கல்வி அமைச்சின் கீழ் வரும் எந்த ஒரு நிறுவனத்திலோ வேறு எந்தவொரு கற்கை நெறியையும் பயில்வதற்கு அனுமதி பெறுவதற்குத் தகுதியற்றவராவார்.**

**(ii)** **பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ்வரும் ஏதாவது பல்கலைக்கழகத்திலோ (இலங்கை திறந்த பல்கலைக்கழகம் தவிர்ந்த) அல்லது உயர்கல்வி அமைச்சின் கீழ்வரும் உயர்கல்வி நிறுவனத்திலோ முழுநேர கற்கைநெறிக்கு பதிவு செய்து கொண்டுள்ள மாணவர்கள் விண்ணப்பிக்க தகுதியற்றவர்கள் ஆவர்.**

பணிப்பாளர்,
தொழில்நுட்பவியல் நிறுவனம்,
மொறட்டுவைப் பல்கலைக்கழகம்.